# யதிராஜ விம்சதி

ஸ்ரீ உ.வே. யதீந்த்ரப்ரவண ப்ரபாவம் பிள்ளைலோகம்
**பாஷ்யகாராசார்ய ஸ்வாமி**

ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தத்தைப் பரவச் செய்த நம் பூர்வாசாரியர் பரம்பரையில் சரமரானவர் ஸ்ரீமணவாளமாமுனிகள். இவருடைய ஜ்ஞான பக்தி வைராக்யங்கள் வாசாமகோசரம். ஸதாசார்யரான திருவாய்மொழிப் பிள்ளையின் இன்னருளால் தத்வ ஹித புருஷார்த்தங்களை உண்மையாக அறிந்து தெளிந்தார். அதாவது சரமபர்வமான ஆசார்ய விஷயமே சிறந்ததெனக் கொண்டார். அதற்குரிய ஸ்வரூபாநுரூபமான உபாயத்தைக் கடைப்பிடித்தார். ஸ்வாமி எம்பெருமானார் தான் ஆசார்யத்வபூர்த்தி யுடையவரென்றும், அவருடைய ஸம்பந்தத்தால் தான் முன்புள்ள ஆசார்யர்களும் பின்புள்ள ஆசார்யர்களும் ஆன்மோஜ்ஜீவனத்தை எய்தினரென்றும் ஸம்சய விபர்யயமற அறிந்து, தம் ஆசார்ய ருசி பரிக்ருஹீதமான எம்பெருமானார் விஷயமே தஞ்சமென்று அத்யவஸித்திருந்தார்.

இவ்வாசார்யர் பின்புள்ளாரான நம்போலியர்களுக்கு உபகாரமாகப் ஸ்வதந்த்ர க்ரந்தங்களையும் வ்யாக்யான க்ரந்தங்களையும் அருளிச் செய்தார். அவற்றுள் ஒன்று யதிராஜவிம்சதி என்னும் க்ரந்தம் ஸ்வத்ந்த்ர க்ரந்தமாகும். இது எம்பெருமானாரை சரணாகதி பண்ணும் க்ரமத்தில் உள்ளது. இப்ரபந்தத்திற்கு உண்டான சிறப்பையும் இவருடைய சிஷ்யர்களுள் ஒருவரான எறும்பியப்பா என்பவர் அருளிச் செய்துள்ளார். அதாவது-

''யதிபதி ப்ரஸாதிநீம்'' என்பது ப்ரபந்தத்தின் சிறப்பை உணர்த்துவதாகும். இச் சேதனனை நாம் கடாக்ஷிப்பதில்லை என்றிருக்கும் எம்பெருமானாரையும் இப்ரபந்தம் திருச் செவிசாற்றியவுடனே அவனிடத்தில் அனுக்ரஹத்தைப் பண்ணியல்லது நிற்க ஒண்ணாதபடி பண்ணுவிக்கும் என்பதாகும். திருவரங்கத்தமுதனாரும் 'சுரக்கும் திருவுமுணர்வும்' என்று அருளியுள்ளார்.

'ப்ரபந்நஜநசாதகாம்புதம்' என்பது வக்தாவான மணவாளமாமுனிகளின் சிறப்பை உணர்த்துவதாகும். அதாவது ப்ரபந்த ஸம்பந்திகளான ஜநங்களாகிற சாதகங்களுக்கு வர்ஷுகவலாஹகர். எம்பெருமானாருடைய கல்யாண குணங்களைத் தாம் அநுபவித்து அவற்றை தத்ஸம்பந்திகளுக்கு போக்யமாக உபதேசிப்பவர் என்பதாகும். இவ்விரண்டுமே மணவாள மாமுனிகளின் பெருமையைக் காட்டுகிறது எனலாம்.

இப்ரபந்தத்திற்கு சுத்த ஸத்வம் தொட்டையாசாரியர் ஸ்வாமி, பிள்ளைலோகம் ஜீயர், திருமழிசை அண்ணாவப்பங்கார் ஸ்வாமி முதலானார் வ்யாக்யானமருளிச் செய்துள்ளனர்.

இனி ப்ரபந்தத்தில் அநுஸந்தித்த விஷய ஸாரத்தைக் காணலாம். இதில் முமுக்ஷுக்கள் அறிய வேண்டியவையான திருமந்த்ரம் த்வயம் சரமச்லோகம் என்னும் ரஹஸ்யங்களில் (சுருக்கமாக) அடங்கிய அர்த்த விசேஷங்களையே மணவாள மாமுனிகள் காட்டியுள்ளார். மேலும், மூலமந்த்ரத்தில் மூன்று பதங்களும் மந்த்ர ரத்னத்தில் ஆறு பதங்களும் சரமச்லோகத்தில் பதினோரு பதங்களும் காணப்படுவதால் அவற்றைச் சேர்த்து வ்யாக்யனமாக அமைந்த இப்ரபந்தத்திலும் இருபது ச்லோகங்கள் அமைந்தன என்றும் சிலர் அருளுவர். ப்ரபந்நகாயத்ரியான இராமநுச நூற்றந்தாதிக்கு ஸங்க்ரஹமாகையாலே இதிலும் ச்லோகம் தோறும் 'யதிபதி, யதீந்த்ர' என்னும் திருநாமத்தின் அநுஸந்தானம் காணலாகும்.

ப்ரபத்தி சாஸ்த்ரத்தில் எம்பெருமானே உபாயமென்றும் அவனே உபேயமென்றும் அறிதியிடப்பட்டுள்ளது. அவற்றினுடைய எல்லை நிலங்களே சரமோபாய உபேயங்கள். அதாவது ஆசார்யனே உபாயமென்றும் அவனே உபேயமென்றும் தேறியது. ப்ரக்ருதத்தில் எம்பெருமானார் ஆசார்யத்வ பூர்த்தி பெற்றவர். ஆகவே, மணவாள மாமுனிகள் இதில் எம்பெருமானாருடைய உபாயத்வோபேய த்வங்களை அநுஸந்திக்கிறார்.

உபாயத்துக்கு வேண்டுவன விஷயபூர்த்தி, அபராத பூயஸ்த்வம், ஆகிஞ்சன்யம், அநந்யகதித்வம், உபாயோபேய ப்ரார்த்தனை என்பன. இவற்றையெல்லாம் இதில் காணலாம்.

முதல் இரண்டு ச்லோகங்களாலே பற்றப்படும் உபாயமான எம்பெருமானாரின் (விஷய) பூர்த்தியை விண்ணப்பம் செய்கிறார்.

> ''உபாப்யாமேவ பக்ஷாம்யாம் யதாகே பக்ஷிணாம் கதி: ।
> ததைவ ஜ்ஞான கர்மப்யாம் ப்ராப்யதே புருஷோத்தம: ॥''

என்கிறபடியே ஜ்ஞாநானுஷ்டானங்கள் இரண்டும் பகவத் ப்ராப்தி ஸாதநமாக சாஸ்த்ரம் விதித்துள்ளது. அதன்படி முதல் ச்லோகத்தில் எம்பெருமானாருடைய ஜ்ஞான பூர்த்தியைச் சொல்லி, இரண்டாம் ச்லோகத்தில் அதற்கநுகுணமான அநுஷ்டான பூர்த்தியை அருளிச் செய்கிறார்.

நம்மாழ்வார் திருவடிகளில் ப்ரேமபௌஷ்கல்யமும், ஸ்வாபிமானத்தில் ஒதுங்கியவர் களின் துக்கங்களைப் போக்குகையும் இஷ்டத்தைக் கொடுக்கையும் ஆகிற ரக்ஷகத்வம் சொல்லப்பட்டது. இவையித்தனையும் ஜ்ஞானாசார்யமிறே திருவரங்கத்தமுதனார் முதல் பாசுரத்தில் அநுஸந்தித்த அர்த்தத்தையே இவரும் முதல் ச்லோகத்தில் அருளிச் செய்வதால் ப்ரபந்நகாயத்ரியின் ஸங் க்ரஹம் என்னும் நிலை அநுபவிக்கலாகும்.

அநுஷ்டான விஷயத்தில்ததீய சேஷத்வ பர்யந்தமான தத்சேஷத்வ ஜ்ஞானத்துக்கு அநுகுணமாக பர்வத்ரய கிஞ்சித்காரத்தை அநுஸந்திக்கிறார். அதனை அழகிய மணவாளன்

திருவடித் தாமரைகளில் வர்த்திக்கும் ஹம்ஸச்ரேஷ்டமென்னும் நம்மாழ்வாருடைய திருவடித் தாமரைகளின் போக்யதையை ஜீவனமாக உடைய வண்டு என்றும், பெரியாழ்வார் திருமங்கையாழ்வார் இவர்களுடைய திருமுகமண்டலமாகிற தாமரையை அலர்த்தும் ஆதித்யன் போன்றவர் என்றும் பரமரஸமாக அருளிச் செய்துள்ளார். சிஷ்யாசார்ய க்ரமத்துக்கு எல்லை நிலமான கூரத்தாழ்வாருக்கு ப்ராப்ய ப்ராபகங்கள் தாமே என்று அருளிச் செய்யும் க்ரமத்தால் ஆச்ரித விஷயத்தில் இவர் இருக்கும் இருப்பையும் காட்டினார். இத்தகைய ஜ்ஞாநாநுஷ்டானமுடைய வகுத்த சேஷியான எம்பெருமானாரிடத்தில் முதல் ச்லோகத்தால் 'மூர்த்நா ப்ரணமாமி' என்று காயிக கைங்கர்யத்தையும், இரண்டாம் ச்லோகத்தில் 'ஈடே' என்று வாசிகமான கைங்கர்யத்தையும், செய்து அன்றிவ்வுலக மளந்தாய்படியே குணங்களுக்குத் தோற்று ஸ்தோத்திரம் செய்கிறார்.

மேல் 3,4,5 ச்லோகங்களில் ப்ராப்யப்ரார்த்தனை அவற்றுள் முதல் ச்லோகத்தாலே-கரணத்ரத்தாலும் எம்பெருமானாருடைய திருவடிகளையே உபாயோபேயங்களாக அத்யவஸித்திருக்கும் பூர்வாசார்யர்களுடைய திருவடிகளைத் தாம் இடைவிடாமல் நினைத்துக் கொண்டிருக்க வேணுமென்று ப்ரார்த்திக்கிறார். ப்ரேமம் தலையெடுத்தால் க்ரமம் பார்க்கவொட்டாது. கரணங்களினுடைய பதற்றத்தால் மனஸ்ஸடியாக வரும் க்ரமம் குலைந்து வாசா மநஸா வபுஷாச, என்றருளினார். 'வாங்மன: காயை: என்று கூட்டிச் சொல்லாதே பிரித்துச் சொல்லுகையால் கரணைக தேச ஸமாச்ரயணமும் கார்யகரம் என்பது அறியலாகும்.

4 ஆம் ச்லோகத்தில் மஹோபகாரதரான எம்பெருமானார் திருவடிகளில் கைங்கர்யத்தில் தம்முடைய கரணத்ரயத்துக்கும் அநவரதம் அந்வயம் உண்டாகவேணுமென்று அவர் தம்மையே ப்ரார்த்திக்கிறார். கீழ் இரண்டு ச்லோகங்களில் ப்ரார்த்தித்த அர்த்தங்களுக்கு ப்ரமாணம் திருமந்த்ர மாகையாலே அதிலுள்ள பதத்ரயார்த்த நிஷ்டையைத் தனக்கு அருளவேணும் என்கிறார். அதாவது-அநந்யார்ஹ சேஷத்வ, அநந்ய சரணத்வ, அநந்ய போக்யத்வங்களாகிற அர்த்தங்களில் அவிசால்யமான இருப்பு என்பதாகும். அதனையும், தம் புத்தியானது எம்பெருமானார் திருவடிகளை அநுபவித்து த்ருஷ்டமாம்படி செய்தருள வேணுமென்றும் 5ஆம் ச்லோகத்தில் ப்ரார்த்திக்கிறார்.

திருமந்த்ரத்தில் மூன்று பதங்களால் வெளிப்படையாகச் சொல்லப்படும் அர்த்தம் பகவதநந்யார்ஹ யேஷத்வ பகவதநந்ய சரணத்வபகவதநந்ய போக்யத்வங்களாகும். இது திருமந்த்ர தாத்பர்யமாகாது. இம்மூன்று நிலைகளும் ஆசார்ய விஷயத்தில் அமைவதே திருமந்த்ரார்த்தத்தின் உள்ளபடி நிலையாகும்.

எம்பெருமானாருடைய சரண கமலங்களையே உபாயமாக அநுஸந்தித்து சரணாகதி செய்பவராகையாலே மணவாள மாமுனிகள், உபாயக்ருத்யம் இஷ்ட ப்ராபணமும் அநிஷ்ட நிவாரணமும் ஆகையாலே ப்ராப்யூயமான இஷ்டத்தை 3,4,5, ச்லோகங்களில் ப்ரார்த்திது மேல் 7 ச்லோகங்களில் அதாவது 6 முதல் 12ஆம் ச்லோகம் முடிய தம்முடைய

ஆகிஞ்சந்யத்தையும் தோஷ பூயஸ்த்வத்தையும் விண்ணப்பம் செய்கிறார். இது 13ம் ச்லோகத்தில் ப்ரார்த்திக்கப்படுகிற அநிஷ்ட நிவ்ருத்திக்குடலாகும். மேல் 13ஆம் ச்லோகத்தில் விரோதி நிவ்ருத்தி ப்ரார்த்தனையைச் செய்கிறார். அதாவது பாபார்ஜன பூமியுமாய் தத்பலமான துக்காநுபவத்துக்கும் ஸ்தானமான சரீரத்திலிருப்பைத் தவிர்த்துக் கொள்ள மாட்டாமல் பாபாதிசயத்தாலே சரீரநிவ்ருத்தியில் அபேக்ஷை பிறக்கிறதில்லை. அப்படிப்பட்ட பாபத்தையும் தேவரீரே சீக்ரமாகப் போக்கியருள வேணும் என்கிறார்.

14, 15 ச்லோகங்களில் தம்முடைய அநந்ய கதித்வத்தை விண்ணப்பம் செய்கிறார். மெய்யே நீசனாகையாலே அடியேனுக்கு தேவரீர் க்ருபையொழிய மற்றொரு கதியில்லை என்கிறார். இரண்டு ச்லோகங்களிலும் "தே கருணைவ மத்கதி:" என்று அறுதியிட்டுள்ளார். திருவரங்கத்தமுதனார் கூர்த்தாழ்வானின் பெருமையை 'மொழியைக் கடக்கும் பெரும் புகழான்' என்று அருளினாற்போல் இவரும் வாசாமகோசர மஹாகுண' என்று புகழ்ந்து அவர் அருளிய ஸமஸ்த தோஷங்களுக்கும் ஸ்ரீ ஆளவந்தார் பட்டர் இவர்கள் அருளிய எல்லா நீசக்ருத்யங்களெல்லாவற்றுக்கும் நான் ஆச்ரய பூதன். அத்தகைய எனக்கு தேவரீருடைய க்ருபையே புகல் என்கிறார்.

இவ்வாறு மணவாள மாமுனிகள் ஆகிஞ்சந்ய அநந்யகதித்வங்களையும் தோஷபூயஸ்த்வத்தையும் அநுஸந்தித்து 'சப்தாதிபோக விஷயா' என்று தொடங்கும் 16ஆம் ச்லோகத்தில் விரோதி நிவ்ருத்தி பூர்வகமாக ப்ராப்யத்தின் சரமாவதியை அருள வேணுமென்று வலியுறுத்து கிறார். இது கீழே ப்ரார்த்தித்த அநிஷ்டநிவ்ருத்தி இஷ்டப்ராப்திகளின் சரமாவதியாகும். அநிஷ்ட நிவ்ருத்திக்கும் இஷ்ட ப்ராப்திக்கும் ஈச்வரன் அன்றோகடவன்? அது நமக்கு பரமோ என்று எம்பெருமானார் திருவுள்ளமாக ஈச்வரனும் தேவரீர் அருளியவாறே செய்யும்படி வச்யன் அன்றோ! ஆகையால் தேவரீரே சக்தர் என்று 17ஆம் ச்லோகத்தில் அநுஸந்தித் துள்ளார்.

உபாயபூதனான ஈச்வரன் நமக்கு பவ்யனாயிருந்தாலும் அநாதிகாலம் அவனுடைய ஆஜ்ஞாரூபமான சாஸ்த்ர மர்யாதையை மீறி முக்காரணங்களாலும் அதிக்ரூரமான பாபங் களைச் செய்தவர் திறத்தில் ஈச்வரனுக் குண்டான சீற்றத்தை அவனையே ப்ரார்த்தித்து ஆற்றிக் கொள்ள வேண்டாவோ! என்று எம்பெருமானாருக்குத் திருவுள்ளமாக 18 ச்லோகத்தில் மணவாளமாமுனிகள், வத்ஸலையான தாய்தான் மருந்து குடித்துப் பிள்ளை நோயைப் போக்குமா போலே தேவரீரும் ஆச்ரிதரான அடியோங்களுக்காக பிராட்டிக்கு வல்லபனான எம்பெருமான் திருவடிகளிலே ஸர்வாபராதங்களையும் பொருத்தருள வேணுமென்று ப்ரார்த்தித்து அருளுகையாலே அடியோங்களுக்கு அந்தக் குறையில்லை என்கிறார்.

கீழ் பலபடியாக-தம்முடைய தோஷ பூயஸ்த்வத்தையும், ஆகிஞ்சந்ய அநந்ய கதித்வங் களையும் பாப நிவ்ருத்தி பூர்வக ப்ராப்யலாபத்தில் அபேக்ஷையையும், பாபத்தைப் போக்கி

அபேக்ஷிதம் செய்கைக்கு அத்தலையில் சக்தி விசேஷத்தையும் நிரபேக்ஷோபதாரகத்வத்தையும் விண்ணப்பம் செய்தவாறே திருவுள்ளம் உகந்தார் எம்பெருமானார். உமக்கு வேண்டுவது என்ன என்று வினவினார். இவரும் 'நித்யம் யதீந்த்ர' என்று தொடங்கும். 4ஆம் ச்லோகத்தில் ப்ரார்த்திதபடியே எம்பெருமானார் திருவடிகளிலே நிரதிசய கைங்கர்யத்தை வேணுமென்றார். அது முன்னமேயே திருமலையாழ்வார் உமக்குத் தந்தருளினாரே என்றார். ஆகிலும் அதனைத் தேவரீர் அநுதினம் அபிவ்ருத்தமாம் படி செய்தருள வேணும். அதற்கு விரோதியான விஷய ப்ராவண்யத்தைப் போக்கியருள வேணும் என்கிறார் 19ஆம் ச்லோகத்தில்.

திருவரங்கத்தமுதனார் நூற்றந்தாதி முடிவில் உன் தொண்டர்கட்கே அன்புற்றிருக்கும்படி என்னையாக்கி அங்காட்படுத்தே' என்று ப்ரார்த்தித்த முறையில் இவரும் ஆசார்ய தாஸ்யத்தைத் ததீயபர்யந்தமாக ஆக்கவேண்டுமென்று 'தாமந்வஹும் மம விவர்த்தய' என்று அநுஸந்தித்துத் தலைக்காட்டுகிறார். கண்ணனும் நம்பி மூத்த பிரானுடன் ஸ்ரீ மாலாகாரை யாசித்துப் பூச்சூடியது அவன் ஸ்வரூபம் நிறம் பெறுகைக்காகவிறே, யாசித்துப் பிறர் கார்யம் செய்யுமவர்க்கு ப்ரார்த்தனை மிகையன்றோ! தேவரீர் ஸ்வாமியன்றோ! உடைமையானதின் காரியம் செய்கை உடையவனுக்கே பரமிறே. இத்தகைய கருத்துக்களை 'நாத' என்னும் விளியில் ஆவிஷ்கரிக்கிறார்.

நிகமத்தில் இவர் தம்முடைய உபய வித அபேக்ஷிதத்தை விண்ணப்பம் செய்தவாறே இவாபேக்ஷிதம் செய்தல்லது நிற்கவொண்ணாதபடியான க்ருபை கரைபுரண்டு இருக்குமிருப்பைக் கண்டார் மாமுனிகள். அடியேனுடைய விண்ணப்பமான இப்ரபந்தத்தை தேவரீர் திருவுள்ளம் பற்றி அருள வேணுமென்று 20ஆம் ச்லோகத்தில் விண்ணப்பம் செய்து முடித்துக் கொள்கிறார். அடியேனுடைய தோஷங்களைப் பார்த்து உபேக்ஷியாமல் என்னுடைய சாபல்யத்தாலே அடைவு கெட விண்ணப்பம் செய்த இந்த ஸ்தோத்திரத்தை அங்கீகரித்தருள வேணுமென்றானாயிற்று.

இத்தகைய மணவாள மாமுனிகள் சரமகமலங்களையே உபாயோபேயமாக நாம் அநுஸந்தித்து அத்யவஸித்து இருப்போமாக.

எம்பெருமானார் ஸம்பந்தத்தைத் திருவாய்மொழிப்பிள்ளை மணவாள மாமுனிகளுக்கு உபகரித்தாப்போலே, எம்பெருமானார் மணவாளமாமுனகள் ஸம்பந்தத்தை உபதேச மூலமாக மஹோபகாரம் செய்து உய்வித்த நம் ஸ்வாமி திருவடித் தாமரைகளில் தலைவணங்கி ஸ்வாமி உகந்த கைங்கர்யத்தைச் செய்வோமாக.

ஜீயர் திருவடிகளே சரணம்.